ஒவ்வொரு குழந்தையும் தான் மிகவும் பாதுகாப்பாக இருப்பதற்கு உரிமை உண்டு. இதை துளிரும் நம்புகிறது. துளிரின் பல செயல்பாடுகளில் ஒன்று - குழந்தைகளை வன்முறையிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்ற ஆலோசனைகளையும், தகவல்களையும் குழந்தைகள், பெற்றோர், பள்ளிகள் மற்றும் பல சமூகத்தினருக்கு வழங்குகிறது.

கட்டிப்பிடி, கிச்சுகிச்சு மூட்டு :
தொடுதல் விதியை தெரிஞ்சுக்கலாமா?
இந்தக்கதையின் கதாபாத்திரங்களான ரவி, ராணியின் மூலம் அவர்களை பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பின்பற்ற வேண்டிய சில தொடுதல் விதிமுறைகளை இந்தக்கதை அழகாக எடுத்துக் கூறுகிறது.

Tulir

74, இ.வி.கே. சம்பத் சாலை, வெப்பேரி, சென்னை 600 007,
இந்தியா. தொலைபேசி : (044) 26632026
மின் அஞ்சல் : tulircphcsa@yahoo.co.in
மின் இணையம் : www.tulircphcsa.org

உதவியோர்:
actionaid international india

1 book & 1 free Audio CD
Max. Retail Price Rs. 125/-
(Tax exempted)

## கட்டிப்பிடி, கிச்சுகிச்சு மூட்டு :
# தொடுதல் விதியை தெரிஞ்சுக்கலாமா?

கதை சொல்பவர் : **ரேவதி**



COVER - B

COVER - F

## ரகசியம்

தொடுதல் பற்றிய ரகசியம் நல்லதல்ல. தொடுதல் விதிகளை யாராவது மீற முயற்சி செய்தா அல்லது உன்ன ரகசியமா வெச்சுக்கச் சொன்னா அதை உடனே நீ நம்பற பெரியவங்ககிட்ட சொல்லணும்.



## "வேண்டாம்"ன்னு சொல்லு

இந்தத் தொடுதல் விதி யை உங்கிட்ட யாராவது மீறினால் "வேண்டாம்"ன்னு சொல்லக் கத்துக்கிறது ரொம்ப அவசியம். இதைச் சத்தமாச் சொல்லணும்.




## சத்தம் போடு, அங்கிருந்து போய்விடு

சத்தம் போடப் பயிற்சி செய் - ஏன்னா, யாராவது உன்னைக் காயப்படுத்துவோ, உனக்குப் பிடிக்காத மாதிரியோ, பயம், குழப்பம், சங்கடம் ஏற்படுற மாதிரியோ தொட முயற்சி செய்தாங்கன்னா இதைத்தான் நீ செய்யணும்.




## சொல்லிடு

உன்னை யாராவது தொடுற முறை உனக்குக் கவலையோ குழப்பமோ பயமோ ஏற்படுத்தினா, உடனே நீ நம்புற பெரியவங்ககிட்ட அதைப் பத்திச் சொல்லிடு. உதாரணமா, உன்னுடைய அம்மா, அப்பா, டீச்சர், தாத்தா, பாட்டி - இப்படி யாராவது. நீ முதலில் சொல்றவங்க உனக்கு உதவி செய்யலேன்னா வேற ஒருத்தர்கிட்ட சொல்லு. உனக்கு உதவி கிடைக்கும் வரை சொல்லிக்கிட்டே இரு.



## உன் மீது தவறு இல்லை

தொடுதல் விதி யை மீறி சிலர் உன்னைக் காயப்படுத்தினால் அது உன் தவறு இல்லை. சில சமயங்களில் உன்னால் "வேண்டாம்" என்று சொல்ல முடியவில்லை என்றாலோ அல்லது அந்த இடத்தில் இருந்து விலகிச்செல்ல முடியவில்லை என்றாலோ அல்லது மிகவும் பயமாக இருந்தாலோ ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள். காயப்பட வேண்டும் என்று நீ விரும்பவில்லை. அதற்கு நீ காரணமும் இல்லை. உன்னால் எப்போது மற்றவரிடம் சொல்ல முடியுமோ அப்போது சொல்லலாம்.

## உன்னோட யோசனை

நீ பாதுகாப்பா இருக்க என்ன செய்யலாம்னு நீ நினைக்கிறே ?



Design & Illustration - Malavika PC - malavika.pc@gmail.com

COVER - in F

COVER - in B






### கட்டிப்பிடி, கிச்சுகிச்சு மூட்டு :

# தொடுதல் விதியை தெரிஞ்சுக்கலாமா?

Tulir

74, இ.வி.கே. சம்பத் சாலை, வெப்பேரி, சென்னை 600 007, இந்தியா.
தொலைபேசி : (044) 26632026 மின் அஞ்சல் : tulircphcsa@yahoo.co.in
மின் இணையம் : www.tulircphcsa.org

**கட்டிப்பிடி, கிச்சுகிச்சு மூட்டு :**
**தொடுதல் விதியை தெரிஞ்சுக்கலாமா?**


கதை மொழிபெயர்ப்பு : சுதா மஹேஷ் / ப்ரியா அப்பாசுவாமி
ஓவியம் : லலிதா தியாகராஜன்
புத்தக வடிவமைப்பு : ராஜேந்திரன்

Produced by
Karadi Tales Company Pvt. Ltd.
Chennai 600 020
Phone : 91 44 42054243
email : contact@karaditales.com



© & ℗ 2007 Tulir (text, audio and illustration)
Based on Sam's Story © 1986 Committee for Children. Translated, adapted, and reprinted with permission from Committee for Children, Seattle, WA, USA.



No 74, EVK Sampath Road, Vepery, Chennai - 600 007, India.
Phone : (044) 26632026 email : tulircphcsa@yahoo.co.in
www.tulircphcsa.org






ஆசானிடம் சொல், தோழனிடம் சொல்,
யாராவது உன் கவலையை தீர்க்கும்வரை சொல்
உனக்கு உதவுவேன் என்று அவர் சொல்லும்வரை
சொல்லிக்கொண்டே இரு நீ அதுவரை.

வீட்டிலும் சரி, வெளியிலும் சரி,
பள்ளியோ, பூங்காவோ எங்கும் சரி,
பிறரிடம் ஒளித்திட எதுவும் இல்லை.
நீ ஒன்றும் மறைக்க தேவையில்லை.







ஏதோ ஒன்று நடந்திட
உன்மனதை அது குடைந்திட
யாரிடமாவது அதை சொல்லிட
இதோ இதைத்தான் நீ செய்திட


அம்மாவிடம் சொல், அப்பாவிடம் சொல்
பயந்தாலும் சொல், வருந்தினாலும் சொல்.
உனக்கு உதவுவேன் என்று அவர் சொல்லும்வரை
சொல்லிக்கொண்டே இரு நீ அதுவரை.













ரவி நகரத்தில ஒரு பெரிய காலனில தங்கி இருந்தான். அவனுக்கு நிறைய ப்ரண்ட்ஸ் உண்டு. கிரிக்கெட் விளையாடறது, சில சமயம் நிலக்கடல சாப்பிடறது, இதெல்லாம் அவனுக்கு ரொம்ப பிடிக்கும்.







ரவியும் ராணியும் அம்மாகிட்ட இத பத்தி பேசினதுனால, ரொம்ப தைரியமா பீல் பண்ணாங்க. அவங்க சொன்னதெல்லாம் ஞாபகம் வைச்சுகிட்டு இவங்க இரண்டுபேரும் மறுபடியும் அவங்ளோட ப்ரண்ட்ஸ்கூட கோலி விளையாடக் கிளம்பிட்டாங்க.



ராணி, ரவியோட பெஸ்ட் ப்ரண்ட். இவங்க இரண்டுபேரும் எப்பவுமே சேர்ந்துதான் இருப்பாங்க! புத்தகம் படிக்கறது, டிராயிங் பண்ணறது, கோலி விளையாடறது, கண்ணாமூச்சு விளையாடறது, அவங்களுக்கு பிடிச்ச பாடல ரேடியோல கேக்கறது இதெல்லாம்தான் அவங்களோட பொழுதுபோக்கு. அடிக்கடி இவங்க ரெண்டுபேரும் அவங்களுக்கு பிடிச்ச பாட்ட பாடவும் செய்வாங்க.







எனதழகான சிரசு,
சிந்தனையின் பிறப்பு
முன்பின் அசையும்
என் செவிகள் இரண்டு
என் முகவாய், என் சிரிப்பு
எல்லாமே பிடிக்கும்
என்னை எனக்கு ரொம்ப பிடிக்கும்.



என் முரடான முட்டி
வளைவது பிடிக்கும்
என் காலின் விரல்கள்
அது காட்டும் வழிகள்
என் கரும்கூந்தல்
நீர்வீழ்ச்சியைப் போலே
என்னை எனக்கு ரொம்ப பிடிக்கும்.








ராணியோட அம்மா எல்லாத்தையும் கவனமா கேட்டாங்க. ரெண்டு பேரையும் அணைச்சுகிட்டு, ராணியைப் பார்த்து, "அடி சமர்த்தே! நீ தைர்யமா வேண்டாம்னு சொன்னத கேக்க எவ்வளவு சந்தோஷமா இருக்குதெரியுமா? எப்பவும் நான் பாடின பாட்ட ஞாபகத்திலேயே வச்சுகோங்க. வேணாம்னு சொல்லறதுக்கு என்னிக்கும் எப்பவும் பயப்படவே கூடாது. அதுக்கும் மேல என்ன நடந்தாலும் அது உங்க தப்பு இல்ல.

எப்பவும் யாராவது பெரியவங்க உங்கள பயமுறுத்தவோ, மிரட்டவோ செஞ்சாக்க உடனே நீங்க வேண்டாம்னு சொல்லலாம். இப்ப நீங்க என்கிட்ட சொன்னது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு தெரியுமா".








எனதருமை நாயுடன்
கும்மாளம் போட
என்அருமை தோழனோடு
சேர்ந்து விளையாட
ஆனால் சிலசமயம்
எனக்கு தனிமை வேண்டும்
என்னை எனக்கு ரொம்ப பிடிக்கும்.





ஒருநாள், ராணிக்கு உடம்பு சரியில்லாம போயிடுச்சு. ரவிகூட விளையாட ஒருத்தரும் இல்ல. அவனோட மத்த ப்ரண்ட்ஸல்லாம் வேற இடத்துல விளையாட போயிட்டாங்க. அப்போ ரவி வீதில வந்த நிலக்கடலை வியாபாரிய பார்த்து “அட நிலக்கடல சாப்பிடலாமே”ன்னு சொல்லி வீதிக்கு ஓடினான்.



ரவிக்கு பயத்துல ஒரு வார்த்தை கூட வரல்ல. ராணி அவளோட அம்மா சொன்னத ஞாபகம் வைச்சுகிட்டு "வேண்டாம், வேண்டாம், எங்களுக்கு இந்த விளையாட்டு" அப்படின்னு சத்தமா கத்திக்கிட்டே, ரவிய இழுத்துகிட்டு வீட்டுக்குள்ள ஓடிட்டா.

அவ அம்மாகிட்ட நடந்தத எல்லாத்தையும் சொன்னா..





அந்த வியாபாரி கடலய பேப்பர்ல மடிச்சுக்கொடுத்தான். அப்படி கொடுக்கும்போது, அவன் ரவியோட கைய பிடிச்சு அழுத்தினான். அது, ரவிக்கு கொஞ்சம் கூட பிடிக்கல. பயந்துட்டு கையை 'வெடுக்னு' இழுத்து வீட்டுக்குள்ள ஓடிட்டான்.




அடுத்தநாள், இதுபத்தி அவன் ராணிகிட்ட சொன்னான். “அந்த கடலை வியாபாரி என் கையை பிடிச்சு அழுத்தினது எனக்கு பிடிக்கவே இல்லை. ரொம்ப பயந்துட்டேன் தெரியுமா?"

"எனக்கும் இப்படித்தான் ரவி. என் மாமா ஒருத்தர் என்ன சும்மா சீண்டிக்கிட்டே இருப்பாரு. எனக்கு பிடிக்காதமாறி என்னை கட்டிப்பிடிப்பாரு. அது எனக்கு பிடிக்கவே பிடிக்காது. அவர் வீட்டுக்கு வந்தாலே எனக்கு ஒரே பயம். நான் அவர்கிட்ட நிறுத்துன்னு சொன்னேன். அம்மாகிட்டயும் அந்த மாமாவ பத்தி சொன்னேன். அதிலேருந்து அந்த மாமா அப்படி எல்லாம் என்கிட்ட நடந்துகிறதே இல்ல. நீயும் உனக்கு நடந்தத வீட்டுல இருக்கிற பெரியவங்க யார்கிட்டயாவது கட்டாயம் சொல்லணும், சரியா? இப்ப இதப்பத்தி என் அம்மாகிட்ட சொல்லாமா?”





கொஞ்ச நேரம் கழிச்சு, "எனக்கு ஒரு புதிய விளையாட்டு விளையாட தெரியும். அந்த விளையாட்டோட பேர் “டாக்டர், டாக்டர்”. ஆனா அந்த விளையாட்ட பத்தி யார்கிட்டயும் சொல்லக்கூடாது. சரியா. ரொம்ப ரகசியம். அது நம்மளோட ரகசிய விளையாட்டு. அதுல நான்தான் டாக்டர். நீங்க இரண்டு பேரும் என் பேஷண்ட்ஸ். நான் உங்களோட தனிப்பட்ட உறுப்புகள செக்கப் செய்யப்போறேன்” அப்படின்னு சொல்லிக்கிட்டே அவங்க இரண்டுபேர்கிட்டேயும் வந்தான்....



ஒரு நாள், ரவியும் ராணியும் கோலி விளையாடிகிட்டு இருந்தப்போ ஒரு புது பையன் அங்க வந்தான். அவன் பாக்கறத்துக்கு ரொம்ப பெரிய பையனா இருந்தான். அவனும் அவங்களோட விளையாட வரேன்னு சொன்னான். அவங்க காலனிக்கு வந்த புது அண்ணான்னு நினைச்சு ராணி அவனையும் விளையாட சேர்த்துகிட்டா.






ரவி தயங்கினான். ராணி அம்மாகிட்ட இதைப்பத்தி சொன்னா கோவப்படுவாங்களோன்னு பயந்தான். அதோட அவங்ககிட்ட சொல்றளவுக்கு இதுல என்ன பெரிய விஷயம் இருக்குன்னு நினைச்சான்.

"ஆ.....வேணாம், வேணாம், பரவாயில்லை" .

"பயப்படாதே ரவி.
என் அம்மா உனக்கு
கண்டிப்பா உதவுவாங்க"



ரவியும் சம்மதிச்சான். குழந்தைங்க இரண்டுபேரும் ராணியோட அம்மாகிட்ட ஓடி போய் கடலை வியாபாரி நடந்துகிட்ட விதத்தப்பத்தி சொன்னாங்க.



முறையின்றி ஒருவரை
கிச்சுகிச்சு செய்தல் தப்பு
முரட்டு விளையாட்டு
மனம் சொல்லுது தப்பு
முன்பின் தெரியாதவரிடம் மிட்டாய் வாங்குதல்
இவை போன்றதற்கு நான் சொல்வேன் வேண்டாம்.

வெகுநேரம் என்னையொருவர்
கட்டிப்பிடிப்பது தப்பு
உடல் கூனும் வகையில்
என்னை தொடுவதும் தப்பு
இவையெல்லாம் என்னுள்ளே பயமுட்டுவதால்
இவை போன்றதற்கு நான் சொல்வேன் வேண்டாம்.
ம்ஹூம், ம்ஹூம் எனக்கு வேண்டாம் வேண்டாம்







சிகப்பு விளக்கெரிந்தால்
தெருவைக் கடத்தல் தப்பு
ஆழ்கடலில் துணையின்றி
நீந்துவது தப்பு.
மதில் சுவரின் மேலேறி பட்டம் விடுதல்
இவை போன்றதற்கு நான் சொல்வேன் வேண்டாம்.






ராணியோட அம்மா, அவங்க
இரண்டுபேரையும் சமையல் அறைக்கு
கூட்டிட்டுபோயி சாப்பிட சூடான
சமோசாவும், குடிக்க பாலும் கொடுத்தாங்க..

“கவனமாகக் கேளுங்கப்பா, உங்களுக்கு
நான் சில விஷயங்களை தெளிவா
எடுத்துச்சொல்றேன். உங்கள யாராவது
தொடும்போதோ இல்ல அந்த மாதிரி
ஏதாவது பண்ண முயற்சிபண்றபோதோ,
உங்களுக்கு அருவருப்பா, பயமா,
நடுக்கமா இருந்தா, உடனே தவறாம
“ வேண்டாம் "னு சொல்லணும்.
புரியுதா".

"இப்போ இந்த கடலை வியாபாரி செஞ்சாமாதிரியா?"





"ஆமா. இப்போ இந்த கடலை வியாபாரி செஞ்சாமாறி வேற யாராவது உங்ககிட்ட முறையில்லாம நடந்துகிட்டா, சட்டுன்னு தயங்காம "வேண்டாம்" னு சொல்லணும். புரிஞ்சுதா?"

"நீங்க உள்ள போட்டுகிட்டு இருக்கற டிரஸ்ஸ கழட்டவோ, உங்க தனிப்பட்ட உறுப்புகள யாராவது தொடவோ முயற்சி பண்ணினாங்கன்னா, உடனே வேண்டாம்னு கத்தணும். தனிப்பட்ட உறுப்புகள்னா என்னென்னு தெரியுமில்லயா? உங்க ஜட்டி, ஷிம்மி இதால மறைக்கற இடங்கதான். சரியா?

"இப்போ நாம எப்போல்லாம் வேணாம்ன்னு சொல்லறதுக்கு ஒரு பாட்டு பாடலாமா?" அப்பிடின்னு ராணியோட அம்மா கேட்டாங்க.

சரின்னு சொல்லி இரண்டு பேரும் அவங்க பாடுறத கவனமா கேட்டு, பாட்டை திருப்பிப்பாடினாங்க.